[13th August 1960

THE HON. SRI V. RAMIAH: Sir, this question involves so many problems. The hon. Member himself pointed out the damage to concrete roads but at the same time he also referred to humanitarian grounds and all that. So, it is found necessary that a comprehensive study should be made and proposals invited. That is why this work has been left to the Traffic Development Committee.

Use of the name of Mahatma Gandhi, Prime Minister, etc., for business purposes

* 175 *Q.*—SRI P. G. MANICKAM: கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) மகாத்மா காந்தி, இந்தியாவின் பிரதம மந்திரி ஆகியவர்களின் பெயர்களையோ அல்லது படங்களையோ வர்த்தகம் அல்லது தொழிலைப் பெருக்கிக்கொள்ளும்பொருட்டு உபயோகிக்கக் கூடாது என்று யூனியன் சர்க்காரால் 14—2—1959 தேதிய மத்திய கெஜெட் மூலமாக அறிவிக்கப்பட்டிருக்கும் சட்டமானது சென்னை ராஜ்ய சர்க்காரால் அமுலாக்கப்பட்டு வருகிறதா?

(ஆ) அவ்வாறு இச் சட்டம் அமுலில் இருப்பின், 1959-60-ல் இச்சட்டத்தை மீறிய எத்தனை வர்த்தக ஸ்தாபனங்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன?

THE HON. SRI C. SUBRAMANIAM: (அ) Yes, Sir.

(ஆ) Nil, Sir.

Tours of Ministers

* 176 *Q.*—SRI A. A. RASHEED: Will the Hon. the Chief Minister be pleased to state whether the Hon. Ministers have decided to tour in the State only in the first ten days of the month and be in the Headquarters during the rest of the month to attend to their work?

THE HON. SRI C. SUBRAMANIAM: No, Sir. The Ministers have not decided to tour in the State only in the first 10 days of the month and to be in the Headquarters during the rest of the month. Their tours are fixed with reference to the official work they have to do, from time to time, outside the headquarters.

Revision of bus and taxi fares

* 177 *Q.*—SRI P. G. MANICKAM: கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பஸ், டாக்சி கட்டணங்களை மாற்றியமைக்கும் பிரச்சினை சர்க்காரின் பரிசீலனையில் இருக்கின்றதா?

(ஆ) அப்படியானால் இது எப்பொழுது அமுலுக்குக் கொண்டு வரப்படும்?

THE HON. SRI V. RAMIAH: (*a*) The question of fixation of maximum fares in respect of stage carriages plying in this State in terms of naye paise and of revision of fares charged by Baby Taxis in this State is under the consideration of the Government.

(*b*) The proposals have been placed before the State Transport Advisory Committee for advice.

13th August 1960]

Sri P. G. MANICKAM : ஸார், பஸ்களுடைய கட்டண விதங்களும் மாற்றியமைக்கப்படுமா? அப்படி மாற்றியமைக்கும்போது குறையுமா அல்லது அதிகமாகுமா?

The Hon. Sri V. RAMAIAH : இப்போது இருக்கக் கூடிய அணா பைசாவை நயா பைசாவாக மாற்றியமைப்பதென்பதுதான் இப்போதைய யோசனை. அதைத்தான் நான் ஆரம்பத்தில் சொன்னது போல ஸ்டேட் அட்வைஸரி கமிட்டியின் முன்பு வைத்திருக்கிறோம், அவர்களுடைய ஆலோசனைக்கு.

Raw film factory

* 178 Q.—Sri A. A. RASHEED : Will the Hon. the Minister for Industries be pleased to state the date on which the proposed Raw Film Plant at Ootacamund will be started?

The Hon. Sri R. VENKATARAMAN : This Government have no information as to the date on which the project will be commissioned.

Sri A. A. RASHEED : Sir, may I know whether this Government have got at least information relating to the capacity of the proposed **Raw Film Plant?**

The Hon. Sri R. VENKATARAMAN : No, Sir.

Sri J. MATHA GOWDER : எப்போது நிறுவப்படும் என்று சொல்ல முடியவில்லை என்றாலும், நிச்சயமாக உதகையில் கச்சா பிலிம் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படும் என்ற உறுதிமொழி கொடுக்க முடியுமா?

The Hon. Sri R. VENKATARAMAN : நீலகிரி ஜில்லாவிலே, ஊட்டிக்கு ஐந்து மைலுக்கு அருகாமையில் இடம் ஏற்பாடாகி விட்டது. இன்னும் "காண்டூர் சர்வே" யெல்லாம் நடந்துகொண்டிருக்கிறது.

Luggage-carriers in buses

* 179 Q.—Sri P. G. MANICKAM : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

பிரயாணிகள் தங்களுடைய சாமான்களை வைத்துக்கொள்வதற்காக எல்லா பஸ்களிலும் மேல் தட்டுகள் அமைக்கப்பட வேண்டும் என்று சர்க்கார் உத்தரவு போட உத்தேசமுண்டா?

The Hon. Sri V. RAMAIAH : The answer in the negative.

Sri P. G. MANICKAM : ஸார், தற்போது புதிதாகக் கட்டப்பட்டு வரும் பஸ்களில் பிரயாணிகள் அவர்களுடைய சாமான்களை வைத்துக் கொள்வதற்காக மேல் தட்டுகள் அமைக்கப் பட்டிருக்கின்றன. பழைய பஸ்களில் மேல் தட்டுகள் அமைக்கப் படாமல் அநேக பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. அம்மாதிரி பஸ்களில் மேல் தட்டுகளை அமைக்கும் திட்டத்தை சர்க்கார் கையாளுவார்களா?